முருகப்பெருமான் துணை

**மகான் மங்கையர்க்கரசியார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.11.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா
ஞான சமூகம் படைத்திட
ஞானமருளி வந்த தேசிகா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலை திங்கள்
குறைவிலா அறுநான்குதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 24 ம் நாள், 10.11.2023, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசிதனை
தேசிகன் கேட்க மங்கையர்கரசியார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் அரங்கன்
ஞானமே கலியில் சிறந்த வழியாக
ஞானிகளும் முன்மொழிந்து உடனிருக்க
4. இருக்கவே பிரணவக் குடில் நோக்கி
எல்லா மக்களும் நாடிவந்து
கருத்தாக அரங்கனை பணிந்து
கட்டளையாக உபதேசம் தனை ஏற்று
5. ஏற்றுமே தரும சேவை ஆற்ற
எண்ணமதில் சைவ நெறிபட
ஆற்றல்மிக்க சோதி வழிபாட்டை
அகபூசையாக நித்தம் செய்து
6. செய்துமே ஞானிகளை போற்றி
சித்தி அருள்வாய் என வேண்டி
அய்யம் கொள்ளாத் தொடர
அரங்கன் தரும் தீட்சை பலம்

7. தீட்சைபலம் மகா சக்தியாக
தொடர்ந்து வந்து காப்புமாகி
கட்டம் நட்டம் அனுகாதபடி
கலியினில் பெருந்துணைபுரியும்

8. துணைபுரிய மகா வளர்ச்சிகளும்
தெய்வநிலை எட்டும் வண்ணம்
இணையிலா சக்தி பலமுமாகி
எல்லா சித்திகளும் வந்தடையும்

9. அடையவே ஞானியருள் ஞானியராய்
அனைவரும் கடைத்தேறி நின்று
தடையற ஞான வாழ்வாக
தரும ஞானத் தலைமை வந்திட

10. வந்திட ஞானிகள் ஆட்சி
வையகம் ஞான ஆட்சிதனை
செந்தூரான் ஆசிபட அடையும்
செகமே சர்வ பாதுகாப்பை காணும்

11. காணவே உலக மாற்றத்துக்கு
கந்தமகா பலமாக அருளும்
ஞானதேசிகன் படைகள் தானும்
ஞாலமதில் நல்லாட்சி தந்தருளும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—